# தேசிய வண்ண மீன் வானவில் விற்பனை மையத்தின் கடைகளை குத்தகைக்கு விடுதல் தொடர்பான விண்ணப்ப படிவம்

தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம்

# தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம்

## விருப்பமுடையவர்களின் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன

தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம்,தமிழக அரசின் டானி திட்டம் மற்றும் தேசிய வேளாண் அபிவிருத்தி குழுமம் ஆகியவற்றின் நிதிவுதவியுடன் மாதாவரம் மீன்வளப் பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள தேசிய வண்ண மீன் வானவில் விற்பனை மையத்தின் கடைகளைஅலங்கார மீன்வளர்ப்போர் சங்கங்கள்/ குழுமங்களில் உறுப்பினராக பதிவு செய்து, ஐந்து வருடத்திற்கும் மேலாக விலைஉயர்ந்த அலங்கார மீன்கள் மற்றும் உபகரணங்களை உற்பத்தி செய்து வருபவர்களுக்கு, குத்தகைக்கு விட திட்டமிட்டுள்ளது. இந்த விண்ணப்ப படிவமானது எந்தக் காரணத்தைக் கொண்டும் ஒப்பந்த (Tender) திட்ட வரைவாக எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது.

இந்த ஆவணத்தில் கூறப்பட்டுள்ள விதிமுறைகளின் படி பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவமானது கல்லூரி முதல்வர், டாக்டர் எம்.ஜு.ஆர் மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் பொன்னேரி – 601 204 என்ற முகவரியில் சமர்ப்பிக்க வேண்டும். இந்த படிவமானது கல்லூரி முதல்வர், டாக்டர் எம்.ஜு.ஆர் மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் பொன்னேரி – 601 204 என்ற முகவரிக்கு 30-08-2019 3.00p.m முன்பாக வந்தடைய வேண்டும் விண்ணப்ப படிவமானது திறக்கப்பட்ட நாளிலிருந்து 90 நாட்களுக்கு செல்லுபடியாகும்.

விண்ணப்ப படிவமானது கீழ்கண்ட தகவல்களையும் கொண்டிருக்க வேண்டும்.

1. செயல்திறன் அறிக்கை (இரண்டு பக்கத்திற்கும் குறைவாக)
2. நிறுவனம் /அமைப்பு –விடம் இருந்து தற்போதைய பணிகள் மற்றும் மேலாண்மை நடவடிக்கை குறித்த சுயவிவரங்கள்.
3. சேர்த்துக் கொள்வதற்கான ஆதாரங்கள்
4. ஆண்டு அறிக்கை (கடந்த மூன்று வருடத்திற்கான இருப்புநிலை இலாப மற்றும் நஷ்டம் பற்றிய அறிக்கைகள்).

## 1. தேசிய வண்ண மீன் வானவில் விற்பனை மையம் ஒரு அறிமுகம்:

தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம் அதன் மாதாவரம் வளாகத்தில் தேசிய வண்ண மீன் வானவில் விற்பனை மையம் என்ற கட்டிடத்தை நிறுவி அதன் மூலம் உயர்ரக வண்ணமீன்கள் (இந்திய மற்றும் வெளிநாட்டு இனங்கள்) மற்றும் வண்ணமீன் வளர்ப்பதற்கு தேவையான உபகரணங்களை (நீர்த் தாவரங்கள், கண்ணாடித் தொட்டிகள், மீன் உணவு, மருந்து மற்றும் காற்றூற்றிகள்) விற்பனை செய்வதற்கான வசதியினை ஏற்படுத்தி உள்ளது.

தேசிய வண்ண மீன் வானவில் விற்பனை மையம் ஆனது தேசிய வண்ண மீன்வானவில் பூங்கா–வில் உற்பத்தி செய்யப்படும் வண்ணமீன்களை சந்தைப்படுத்துவதற்கு மிகவும் உதவிகரமாக இருக்கும். இதன் நோக்கமானது வேலைவாய்ப்பை மட்டும் அளிப்பதோடு அல்லாமல், பார்வையாளர்கள், உயிரியியலாளர்கள் மற்றும் இயற்கை ஆர்வலர்களின் கவனத்தை ஈர்த்து வண்ண மீன்களின் தேவையினை மேலும் அதிகரிப்பதாகும்.

## 2. தேசிய வண்ண மீன் வானவில் விற்பனை மையம் குறிக்கோள்கள்

1. தேசிய அளவில் ஒரு கட்டமைப்பினை உருவாக்கி அதன் மூலம் வண்ணமீன் விற்பனையாளர்களை (குறிப்பாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வண்ண மீன்கள், கண்ணாடி தொட்டிகள், மீன் உணவு மற்றும் நீர்த் தாவரங்கள்) ஒருங்கிணைத்து ஒரு விற்பனை மையத்தினை அமைத்தல்

2. தேசிய வண்ண மீன் வானவில் பூங்காவில் உற்பத்தி செய்யப்படும் மீன்களின் விற்பனை மையத்தினை உருவாக்குதல்.

3. இங்கு திறக்கப்படவுள்ள கடைகளை 120-150 வர்த்தகதாரர்களுக்கு குத்தகைக்கு விட்டு, வண்ணமீன் வளர்ப்பாளர்களுக்கும் மற்றும் ஏற்றுமதி செய்பவர்களுக்கும் இடையே உள்ள இடைத்தரகர்களை குறைத்து, குளத்தூர் மற்றும் மாநிலங்களின் பிற பகுதிகளில் வண்ணமீன் உற்பத்தி செய்பவர்களின் ஏற்றுமதியினை சீர்செய்தல்.

## 3. தேசிய வண்ண மீன் வானவில் விற்பனை மையத்தில் உள்ள வசதிகள்:

மேற்சொன்ன குறிக்கோளை வைத்து தேசிய வண்ண மீன் வானவில் விற்பனை மையம் ஆனது கீழ்கண்ட வசதிகளுடன்உருவாக்கப்பட்டுள்ளது.

I. மொத்தம் உள்ள 44 கடைகளுக்கும் (ஒவ்வொரு கடையும் 190 சதுர அடி) மின்சார அமைக்கப்பட்டு அதன் மூலம் வண்ண மீன்களை காட்சிபடுத்தும்படி வசதி செய்து தரப்பட்டுள்ளது.

II. மீன்களை பேக்கிங் செய்வதற்கான வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன.

III. வாகனங்கனை நிறுத்துவதற்கான வசதிகள் உள்ளன.

IV. மொத்த வளாகத்தையும் சுற்றி கம்பி-வேலி அமைக்கப்பட்டுள்ளது.

V. மாதாவரம் மெயின் ரோட்டில் இருந்து தேசிய வண்ண மீன் வானவில் விற்பனை மையம் வருவதற்காக சிறந்த ரோடு வசதி செய்து தரப்பட்டுள்ளது.

VI. அலுவலக கட்டிடம்: கீழ்தளத்தில் ஒரு அறையானது (190 சதுர அடி) அலுவலக பணிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

VII. தண்ணீர் வசதிகள்: தரமான நீரானது ஒரு கிணற்றிலிருந்து குழாய்கள் மூலம் எடுக்கப்பட்டு ஒவ்வொரு கடைகளுக்கும் வழங்கப்பட வசதி செய்யப்பட்டுள்ளது. மேல்நிலை தொட்டிகளின் உதவியுடன் நீரானது ஒவ்வொரு கடைகளுக்கும் வழங்கப்படுகிறது. வுழங்கப்படும் தண்ணீரானது கட்டணத்திற்கு உட்பட்டது.

VIII. மின்சார வசதிகள்: மொத்த கட்டிடத்திற்கும் மின்சாரமானது மைய பிரிவிலிருந்து பிரித்து ஒவ்வொரு கடைகளுக்கும் வழங்கப்படும். தனித்தனியாக மின்சார அளவீடுகள் அமைக்கப்பட்டு பயன்படுத்தப்படும் மின்சாரத்திற்கு கட்டணம் வசூலிக்கப்படும்

IX. கழிவறை கட்டிடம்: வளாகத்திற்கு வரும் அனைவரும் உபயோகிக்கும் வகையில் தேசிய வண்ண மீன் வானவில் விற்பனை மையத்தில் கழிவறை வசதிகளும் அமைக்கப்பட்டு உள்ளன.

X. பாதுகாவலர் மற்றும் மின்சார கட்டிடம்: மின்சார அளவீடுகள் பொருத்தப்பட்ட ஒரு அறையானது பாதுகாவலர் உதவியுடன் பராமரிக்கப்படும். இது வளாகத்தின் பாதுகாப்பை மேலும் உறுதி செய்யும். மின்சார பயன்பாட்டின் அளவானது குறிக்கப்பட்டு அதற்கான பணமானது செலுத்தப்பட வேண்டும்.

## 4. தேசிய வண்ண மீன் வானவில் விற்பனை மையம் இயங்கும் விதம்:

தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம்தமிழக அரசின் டானி திட்டம் மற்றும் தேசிய வேளாண் அபிவிருத்தி குழுமம் ஆகியவற்றின் நிதிவுதவியுடன் மேற்சொன்ன குறிக்கோளின் படி,தேசிய வண்ண மீன் வானவில் விற்பனை மையம் உருவாக்கப்பட்டு அதன் கடைகள் குத்தகைக்கு விடப்பட உள்ளன. இதை முற்போக்கான வண்ணமீன் உற்பத்தியாளர்களுக்கு குத்தகைக்கு விட்டு தமிழ்நாட்டின் வண்ணமீன் உற்பத்தியினை கீழ்கண்ட குறிக்கோளின் படி மேலும் அதிகப்படுத்த முடியும்.

1. தேசிய அளவில் ஒரு கட்டமைப்பினை உருவாக்கி அதன் மூலம் வண்ணமீன் விற்பனையாளர்களை (குறிப்பாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வண்ண மீன்கள், கண்ணாடி தொட்டிகள், மீன் உணவு மற்றும் நீர்த் தாவரங்கள்) ஒருங்கிணைத்து ஒரு விற்பனை மையத்தினை அமைத்தல்

2. தேசிய வண்ண மீன் வானவில் பூங்காவில் உற்பத்தி செய்யப்படும் மீன்களின் விற்பனை மையத்தினை உருவாக்குதல்.

3. இங்கு திறக்கப்படவுள்ள கடைகளை 120-150 வர்த்தகதாரர்களுக்கு குத்தகைக்கு விட்டு, வண்ணமீன் வளர்ப்பாளர்களுக்கும் மற்றும் ஏற்றுமதி செய்பவர்களுக்கும் இடையே உள்ள இடைத்தரகர்களை குறைத்து, குளத்தூர் மற்றும் மாநிலங்களின் பிற பகுதிகளில் வண்ணமீன் உற்பத்தி செய்பவர்களின் ஏற்றுமதியினை சீர்செய்தல்.

## 5. குத்தகை பணம் சம்மந்தப்பட்ட முழு விவரங்கள்

| வசதிகள் | மொத்த கடைகள் | பரப்பளவு / கடை (சதுர அடியில்) | குத்தகை பணம்/ சதுர அடிக்கு (a) | பராமரிப்பு செலவு (b) | நீர் செலவு (c) | மின்சார செலவு(d) | மொத்த பணம் |
|---|---|---|---|---|---|---|---|
| வரிசை எண் 3-ஐ பார்க்கவும் | 44 | 190 சதுர அடி / கடை | ரூ.. 50/- சதுரஅடி (தோராயமாக) | இந்த பணமானது பல்கலைகழகத்தால் தீர்மானிக்கப்படும் நேரத்திற்கு நேரம் இது மாறுபடும் | உபயோகப்படுத்தப்படும் அளவை பொறுத்து மாறுபடும் | உபயோகப்படுத்தப்படும் மின்சார அளவினை பொறுத்து மாறுபடும் | a+b+c +d |

இணையதளம் அல்லது வங்கி வரைலோலை மூலமாகவே மட்டுமே பண பரிவர்த்தனையானது செய்யப்படும். வங்கி காசோலைகள் பெற்றுக் கொள்ளப்படமாட்டாது.

## 6. விண்ணப்பதாரரின் தகுதிகள்:

விண்ணப்பதாரர் கீழ்கண்ட திறன்களை கொண்டிருக்க வேண்டும்.

a) அங்கீகரிக்கப்பட்ட அலங்கார மீன்வளர்ப்போர் சங்கங்கள்/அமைப்புகள்/குழுமத்தில் பதிவு செய்திருக்க வேண்டும்.
b) தமிழகத்தில் விலைஉயர்ந்த அலங்கார மீன்கள் மற்றும் உபகரணங்களை உற்பத்தி செய்வதில் குறைந்தபட்சம்ஐந்து வருட அனுபவம் உள்ளவராக இருக்க வேண்டும்.

## 7.தேர்வு செய்யும் முறை:

குத்தகைதாரர்கள் இரண்டு நிலைகளில் தேர்வு செய்யப்படுகின்றன

I. முதல் நிலையில் விருப்பதாரர்கள் விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்
II. பிரித்து எடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் நேர்காணல் மூலம் தேர்வு செய்யப்படுவர். இதற்காக தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம் ஒரு திறமை வாய்ந்த குழுவினை அமைக்கும். அந்தக் குழுவானது விண்ணப்பதாரரின் திறமையின் சோதனை செய்யும். விண்ணப்பம் தயார் செய்தல் மற்றும் அனுப்புவதற்கு ஆகும் செலவினை விண்ணப்பதாரரே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

## 8. குறிப்பு நபர் பெயர் விவரம்:

விண்ணப்பதாரர் தங்களின் திறமையினை நிரூபிக்கும் குறிப்பு நபர்களின் (அதிகபட்சமாக மூன்று நபர்கள்) பெயரினை குறிப்பிடவும்

a)

b)

c)

**<u>9. மேலும் விவரங்களுக்கு அணுக வேண்டிய நபர்</u>**

முனைவர் ப. அகிலன்

கல்லூரி முதல்வர்

டாக்டர் எம்.ஜி.ஆர் மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்

பொன்னேரி – 601 204

தொலைபேசி எண்: 94430 02467

## தேசிய வண்ண மீன் வானவில் விற்பனை மையத்தின் கடைகளை குத்தகைக்கு எடுப்பதற்கான விண்ணப்ப படிவம்

1. பெயர்:

2. அஞ்சல் முகவரி:

3. தொலைபேசி மற்றும் தொலைநகல் எண்:

4. மின்னஞ்சல் முகவரி:

5. உறுப்பினர் விவரங்கள் (சங்கம் / சமூகம்):

6. சங்கம்/ சமூகம் தொடங்கப்பட்ட ஆண்டு :

7. மேலாண்மை விவரங்கள்:

8. சங்கம்/ சமூகம் பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழ்கள் ஏதேனும் உள்ளதா. ஆம் எனில் சான்றிதழ் நகல்களை வழங்கவும்.

9. கடந்த மூன்று ஆண்டுகளாக வருவாய் (ஆதாரங்களுடன்)

10. கடந்த ஐந்து ஆண்டுகளில் உற்பத்தி செய்யப்பட்ட மீன் மற்றும் உபகரணங்களின் பட்டியல் (ஆதாரங்களுடன்).

| வ. எண் | மீன்களின் பெயர்/ உபகரணங்களின் விவரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

**11. பின்வரும் ஆவணங்கள் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ளதா:**

| | | |
|---|---|---|
| 1 | செயல்திறன் அறிக்கை (இரண்டு பக்கத்திற்கும் குறைவாக) | ஆம்/இல்லை |
| 2 | நிறுவனம் /அமைப்பு –விடம் இருந்து தற்போதைய பணிகள் மற்றும் மேலாண்மை நடவடிக்கை குறித்த சுயவிவரங்கள். | ஆம்/இல்லை |
| 3 | சேர்த்துக் கொள்வதற்கான ஆதாரங்கள் | ஆம்/இல்லை |
| 4 | ஆண்டு அறிக்கை (கடந்த மூன்று வருடத்திற்கான இருப்புநிலை, இலாப மற்றும் நஷ்டம் பற்றிய அறிக்கைகள்). | ஆம்/இல்லை |
| 5 | உறுப்பினர் சான்றிதழ் | ஆம்/இல்லை |
| 6 | சங்கம்/ சமூக-த்திடம் இருந்து தேசியவண்ண மீன் வானவில் விற்பனை மையத்தில் சேர்வதற்காக பெறப்பட்ட ஒப்புதல் கடிதம் | ஆம்/இல்லை |

(விண்ணப்பதாரரின் கையொப்பம்)

பெயர்:

இடம் :

தேதி: